பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

17 04 2025 7 15
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. பிரேசில் நாட்டில் நடைபெறும் பிரிக்ஸ் நாடுகளின் வேளாண் அமைச்சர்கள் பங்கேற்கும் கூட்டத்தில் மத்திய அமைச்சா திரு சிவராஜ் சிங் சௌகான் இன்று பங்கேற்கிறார்.
2. பொது மற்றும் தனியார் துறையுடன் இணைந்து ஹைட்ரஜன் கப்பல் உள்நாட்டிலேயே வெற்றிகரமாக வடிவமைக்கப்பட்டுள்ளதாக மத்திய இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் தெரிவித்துள்ளார்.
3. மும்பையில் நடைபெறவுள்ள உலக ஒலி ஒளி பொழுதுபோக்கு உச்சிமாநாட்டில் புத்தொழில் நிறுவனங்கள் பங்கேற்பதற்கு விண்ணப்பிப்பதற்கான காலக்கெடு இம்மாதம் 21-ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
4. அமெரிக்க மற்ற நாடுகளுக்கு விதித்துள்ள கூடுதல் வரி காரணமாக உலகளாவிய வர்த்தகம் நடப்பு ஆண்டு வீழ்ச்சியடையும் என்று உலக வர்த்தக அமைப்பு கூறியுள்ளது.
5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் தில்லி அணி சூப்பர் ஓவர் முறையில் ராஜஸ்தான் அணியை வென்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

பிரேசில் நாட்டில் நடைபெறும் பிரிக்ஸ் நாடுகளின் வேளாண் அமைச்சர்கள் பங்கேற்கும் கூட்டத்தில் மத்திய அமைச்சா திரு சிவராஜ் சிங் சௌகான் இன்று பங்கேற்கிறார்.

பிரிக்ஸ் நாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பு, புதுமை கண்டுபிடிப்பு, சமமான வர்த்தகத்தைக் கொண்ட நீடித்த வேளாண்மையை ஊக்குவித்தல் என்ற தலைப்பின் அடிப்படையில் இந்த மாநாடு நடைபெறுகிறது.,

இக்கூட்டத்தில் பிரேசில், ரஷ்யா, சீனா, தென்னாப்பிரிக்கா, சௌதி அரேபியா, எகிப்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், எத்தியோப்பியா, இந்தோனேஷியா மற்றும் ஈரான் நாடுகளின் வேளாண் அமைச்சர்கள் மற்றும் உயரதிகாரிகள் பங்கேற்கவுள்ளனர்.

இக்கூட்டத்திற்கிடையே திரு சிவராஜ் சிங் சௌகான் பிரேசில் வேளாண்துறை அமைச்சர் திரு கார்லோசை சந்தித்து பேசுகிறார்.

அப்போது வேளாண்மை, வேளாண் தொழில்நுட்பம், ஊரக மேம்பாடு மற்றும் உணவு பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் இந்தியா – பிரேசில் இடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து பேச்சுக்கள் நடைபெறும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

மத்திய ரிசர்வ் காவல்படையின் நிறுவன தினத்தையொட்டி மத்திய பிரதேச மாநிலம் நீமூச்சில் இன்று சிறப்பு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார்.

இந்நகிழ்ச்சியில் அம்மாநில முதலமைச்சர் திரு மோகன் யாதவ் பங்கேற்கிறார்.

அப்போது மத்திய ரிசர்வ் காவல்படையின் அணிவகுப்பு நடைபெறவுள்ளது.

சிறப்பாக பணியாற்றிய வீரர்களுக்கு உள்துறை அமைச்சர் பதக்கங்களை வழங்கவுள்ளார்.,

**[]<<<>>>[]**

நாட்டில் முதல் முறையாக ஹைட்ரஜனால் இயக்கப்படும் கப்பலை உள்நாட்டிலேயே வடிவமைத்ததற்காக மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துணை இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் பாராட்டு தெரிவித்துள்ளார்,

புதுதில்லியில் நடைபெற்ற அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சிக் குழுமத்தின் முன் முயற்சிகள் குறித்த உயர்நிலைக் குழுக் கூட்டத்தில் அவர் பங்கேற்று பேசினார்.

பொது மற்றும் தனியார் துறையினர் இணைந்து இந்த ஹைட்ரஜன் கப்பலை வெற்றிகரமாக வடிவமைத்துள்ளதாக அமைச்சர் கூறினார்.

[]<<<>>>[]

அமெரிக்க தொழிலதிபர் திரு எலன் மஸ்க்-யின் செயற்கைக்கோள் இணையதள சேவை நிறுவனமான ஸ்டார்லிங் நிறுவன பிரதிநிதிகள் மத்திய வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயலை நேற்று சந்தித்து பேசினர்.

இது குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள திரு பியூஷ் கோயல், ஸ்டார்லிங் நிறுவனத்தின் அதிநவீன தொழில்நுட்பம், அவர்களுடைய கூட்டாண்மை, எதிர்காலத்தில் இந்தியாவில் முதலீடு செய்வதற்கான திட்டம் ஆகியவை குறித்து தாம் விவாதித்ததாகக் கூறியுள்ளார்.

ஸ்டார்லிங் நிறுவனத்தின் துணைத்தலைவர் திரு **Chad Gibbs,** இயக்குநர் திரு ரியான் ஆகியோரைக் கொண்ட குழு திரு பியூஷ் கோயலை சந்தித்து பேசியது.

[]<<<>>>[]

அரசின் வளர்ச்சி சார்ந்த கொள்கைகள் தொழில்துறைக்கு புதிய உத்வேகத்தை அளித்துள்ளதாக மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற வர்த்தக மற்றும் தொழில்துறை கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் பேசிய அவர், நாட்டில் பொருளாதார அதிகாரம் அளித்தல் மற்றும் புதுமை கண்டுபிடிப்புகளின் தருணம் நிலவுவதாக குறிப்பிட்டார்.

நாட்டின் வர்த்தகக் கொள்கை சுயசார்பு தொலைநோக்குப் பார்வையை அடிப்படையாகக் கொண்டது என்று அவர் தெரிவித்தார்.

இது உலக அளவில் இந்தியாவின் வளர்ச்சியை பிரதிபலிக்கிறது என்றும் அவர் கூறினார்.

தொழில்துறை கொள்கை எளிமைப்படுத்தப் பட்டுள்ளதாகவும், முதலீட்டாளர்களுக்கு உகந்த வரி கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

2047-ஆம் ஆண்டிற்குள் வளர்ச்சியடைந்த நாடாக இநதியாவை திகழச் செய்வதில் தொழில் மற்றும் வர்த்தகத்துறை முக்கிய பங்கு வகிக்கும் என்றும் திரு ஓம் பிர்லா தெரிவித்தார்.

[]<<<>>>[]

மும்பையில் நடைபெறவுள்ள உலக ஒலி ஒளி பொழுதுபோக்கு உச்சிமாநாட்டில் புத்தொழில் நிறுவனங்கள் பங்கேற்பதற்கு விண்ணப்பிப்பதற்கான காலக்கெடு இம்மாதம் 21-ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

அதிக அளவிலான பங்கேற்பை ஊக்குவிப்பதற்கும், புதுமை கண்டுபிடிப்புகளை அதிகரிப்பதற்கும் தகுதி அளவு கோல்களும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

2016-ஆம் ஆண்டுக்கு பின்பு தொடங்கப்பட்ட புத்தொழில் நிறுவனங்கள் இந்த உச்சி மாநாட்டில் பங்கேற்க விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.,

தற்போது 2020-ஆம் ஆண்டு அல்லது அதற்கு பின்பும் தொடங்கப்பட்ட புத்தொழில் நிறுவனங்களும் பங்கேற்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது,

இதன் மூலம் அதிக எண்ணிக்கையிலான புத்தொழில் நிறுவனங்கள் பங்கேற்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் ஆர்வமுடைய ஊடக தொழில்நுட்ப புதுமை கண்டுபிடிப்பாளர்கள் தங்கள் பரிந்துரைகளை சமர்ப்பிக்க கால அவகாசம் கிடைத்துள்ளது.

[]<<<>>>[]

நவீன கடல்சார் துறை வளர்ச்சியை நோக்கி இந்தியா சென்று கொண்டிருப்பதாக மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியல் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இந்திய மத்திய கிழக்கு ஐரோப்பிய பொருளாதார வழித்தடம் உலகளாவிய போக்குவரத்தில் முக்கயி பங்காற்றுவதாகக் கூறினார்.

பாதுகாப்பான வர்த்தக தடங்கள் மூலம் இந்தியா மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு இடையே போக்குவரத்தை வலுப்படுத்தி உள்ளதாகவும் திரு சர்பானந்த சோனாவால் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

அமெரிக்க மற்ற நாடுகளுக்கு விதித்துள்ள கூடுதல் வரி காரணமாக உலகளாவிய வர்த்தகம் நடப்பு ஆண்டு வீழ்ச்சியடையும் என்று உலக வர்த்தக அமைப்பு கூறியுள்ளது.

உலக அளவில் நடப்பு ஆண்டும், அடுத்த ஆண்டும் நிலவும் வர்த்தகம் குறித்த அறிக்கையை அது வெளியிட்டுள்ளது.

சீனா – அமெரிக்கா இடையேயான வர்த்தகத் தடை கவலை அளிப்பதாக உலக வர்த்தக அமைப்பின் தலைமை இயக்குநர் திரு **okonjo** தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கு இடையேயான பொருளாதாரம் 82 சதவீதம் குறையும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதனிடையே ஹாங்காங்கிலிருந்து அமெரிக்காவுக்கு அனுப்பப்படும் பொருட்களுக்கு அளிக்கப்பட்டு வந்த வரி விலக்கு ரத்து செய்யப்பட்டதை அடுத்து அமெரிக்காவுக்கு சரக்குகள் அனுப்பப்படுவது நிறுத்தப்படும் என்று அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் தில்லி அணி சூப்பர் ஓவர் முறையில் ராஜஸ்தான் அணியை வென்றது.

தில்லியில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த தில்லி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் ஐந்து விக்கெட் இழப்பிற்கு 188 ரன் எடுத்தது.

189 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ராஜஸ்தான் அணி 20 ஓவரில் நான்கு விக்கெட் இழப்புக்கு 188 ரன் எடுத்ததை அடுத்து ஆட்டம் சமனில் முடிவடைந்தது.

இதையடுத்து சூப்பர் ஓவர் முறை கொண்டுவரப்பட்டது.

இதில் முதலில் பேட் செய்த ராஜஸ்தான் அணி ஐந்து பந்துகளில் இரண்டு விக்கெட் இழப்புக்கு 11 ரன் எடுத்தது.

12 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய தில்லி அணி நான்கு பந்துகளில் விக்கெட் இழப்பின்றி 13 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

மும்பையில் இன்று நடைபெறும் போட்டியில் மும்பை அணி – ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**

உலகக்கோப்பை துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியாவின் சௌரவ் சௌத்திரி – சுருச்சி இந்தர்சிங் இணை தங்கப்பதக்கம் வென்றது.

பெருவின் லிமாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் பத்து மீட்டர் கலப்புக்குழுப் பிரிவு இறுதிச் சுற்றில் இந்த இணை 17-9 என்ற புள்ளி கணக்கில் சீனாவின் **Qianxun yao – kai hu** இணையை வென்றது.

**[]<<<>>>[]**

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் இன்று மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சில பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாகவும் அது கூறியுள்ளது.

மாநிலத்தில் அதிகபட்ச வெப்பநிலையை பொறுத்தவரை சில இடங்களில் இரண்டு முதல் மூன்று டிகிரி செல்சியஸ் வரை அதிக வெப்பம் நிலவக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது,.

ராஜஸ்தான் மற்றும் குஜராத் மாநிலங்களில் இன்று கடும் வெப்பம் நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கேரளா, மாகே, மகாராஷ்டிரா உள்ளிட்ட பகுதிகளிலும் வெப்பம் அதிகரித்து காணப்படும் என்று அது கூறியுள்ளது.

பீகார், அஸ்ஸாம், மேகாலாயா மாநிலங்களின் குறிப்பிட்ட இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் அது தெரிவித்துள்ளது.

சிக்கிம், ஜார்க்கண்ட், ஒடிஸா, அஸ்ஸாம், மேகாலயா, நாகலாந்து மணிப்பூர் மாநிலங்களில் பலத்த காற்று வீசக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

***End of News***

17 04 2025 6 45 வக்ஃப் - உச்சநீதி

வக்ஃப் திருத்தச் சட்டம் தொடர்பான விசாரணை உச்சநீதிமன்றத்தில் இன்றும் தொடர்ந்து நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தலைமை நீதிபதி திரு சஞ்ஜீவ் கண்ணா, நீதிபதிகள் திரு சஞ்ஜய் குமார், திரு கே வி விஸ்வநாதன் ஆகியோரை கொண்ட அமர்வு நேற்று விசாரணையை தொடங்கியது.

அப்போது இந்த சட்டம் தொடர்பாக மூன்று கேள்விகளை மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் திரு துஷார் மேத்தாவிடம் நீதிபதிகள் கேட்டனர்.

இதற்கு பதிலளிக்க அரசு வழக்கறிஞர் கால அவகாசம் கோரியதை அடுத்து நீதிபதிகள் அதற்கு அனுமதி அளித்தனர்.

இதையடுத்து வழக்கு விசாரணை இன்று தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

வக்ஃப் திருத்தச் சட்டத்திற்கு எதிராக மேற்குவங்க மாநிலத்தில் நடைபெற்ற வன்முறை சம்பவம் கவலை அளிப்பதாக தலைமை நீதிபதி திரு சஞ்ஜீவ் கண்ணா தெரிவித்தார்.

ரியாஸ்/ச தில்லி / 14